**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM**

**Case No.02/2024**

**Prosecution Witness**

| | |
|---|---|
| **Name** | **: திரு. கே.தண்டாயுதபாணி** |
| **Father's/Spouse's Name** | **: திரு. கருப்பையா** |
| **Address** | **: காவல் உதவி ஆய்வாளர், சிலைதிருட்டு தடுப்பு பிரிவு, கும்பகோணம் சரகம்.** |
| **Calling** | **: காவல் உதவி ஆய்வாளர், சிலைதிருட்டு தடுப்பு பிரிவு, கும்பகோணம் சரகம்.** |
| **Religion** | **: –** |
| **Age** | **: 50** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 24.10.2024**

**Signature of witness,**

**(A1 and A2 are present)**

**CC.No.02/2024 PW 16 : (LW–16 ) 24.10.2024**

**முதல் விசாரணை**

நான் தற்போது கும்பகோணம் சரகம், சிலைதிருட்டு தடுப்பு பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் 2019ம் ஆண்டில் இருந்து கும்பகோணம் சரகத்தில் சிலைதிருட்டு தடுப்பு பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். 28.11.2020 அன்று C.No.1149/IWCID/ Admin2020 Dated: 12.11.2020 ADGP IWCID, Chennai அவர்களின் உத்தரவின் படி நான் பட்டீஸ்வரம் காவல்நிலைய குற்ற எண்.167/2019 ல் ச.பி. 457(2), 380(2) இ.த.ச. வின் கீழ் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். நான் அந்த வழக்கு கோப்பை பார்வையிட்டேன். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் மகேந்திரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் விசாரணை மேற்கொண்ட காவல் ஆய்வாளர் நாகலெட்சுமி அவர்களை விசாரித்து வாக்குமூலம்

பதிவு செய்தேன். பின்னர் சம்பவ இடமான பட்டீஸ்வரத்தில் உள்ள தேனுபுரீஸ்வரர் கோவிலில் சிவன் சந்நதிக்கு சென்று பார்வையிட்டேன். அங்குள்ள சாட்சிகளான செல்வசேகர், கணேச குருக்கள், சுப்பிரமணி, ரவி, எழுத்தர் மோகன், த/பெ. செல்லக்கண்ணு, கோவில் காவலர் மோகன் ஆகியோர்களை விசாரித்த போது அவர்கள் ஏற்கனவே இவ்வழக்கை முதல் விசாரணை செய்த புலன்விசாரணை அதிகாரியிடம் கூறியது போன்றே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. அதன்பின்னர் அந்த கோவில் சொத்துபதிவேட்டை பார்வையிட்டதில் களவு போன ஆஞ்சநேயர் சிலை அந்த கோவிலுக்கு சொந்தமானதாக இருந்தது. அதன்பிறகு அந்த சம்பவம் நடந்த கோவிலில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளில் அங்குள்ள கணினியில் அங்கிருந்த கணினி இயக்குநர் பத்மநாபன் உடன் அமர்ந்து 08.12.2023 அன்று பார்வையிட்டேன். அந்த கண்காணிப்பு கேமரா பதிவுகள் கணினியில் பதிவு செய்திருந்த காட்சியில் 20.10.2019 இரவு 19.05 மணி முதல் 19.40 வரையில் பதிவான காட்சி பதிவுகளை பார்வையிட்டேன். அதில் இரண்டு நபர்கள் அந்த ஆஞ்சநேயர் சிலையை பெயர்த்து எடுத்து ஒரு கட்டைப்பையில் வைத்து எடுத்துச் செல்லும் காட்சி பதிவாகியிருந்தது. அந்த காட்சி பதிவுகளை ஒரு பெண்டிரைவில் (Pendrive) காபி செய்து எடுத்து வந்தேன். குற்றவாளிகள் புகைப்படத்தை செல்வசேகரிடம் கொடுத்து அந்த நபர்கள் மீண்டும் கோவிலுக்கு வந்தால் தெரிவிக்குமாறு சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் எனது புலன் விசாரணையை செய்தேன். பின் 22.12.2022 அன்று 08.00 மணிக்கு சென்னை பைபாஸ் சாலையில் கொரநாட்டு கருப்பூரில் சிலைதிருட்டு சம்பந்தமாக வாகன சோதனை செய்து கொண்டிருந்தேன். அப்போது அங்கு சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் விலாசம் கேட்டுத்தெரிந்த 31 வயது மதிக்கத்தக்க சுப்பிரமணியன் மகன் நீலகண்டன், சின்னத்தெரு, தும்பிக்குளம், தாளவேடு, திருத்தணி தாலுக்கா, திருவள்ளுர் மாவட்டம் என்பவரை விசாரித்து காரணம் கூறி கைது செய்து காவல்நிலையத்திற்கு அழைத்து வந்தேன். அந்த நபரை எதனால் கைது செய்தீர்கள் என்றால் அந்த நபரின் புகைப்படமும் காண்காணிப்பு கேமராவில் பதிவாகியிருந்த நபரின் புகைப்படமும் ஒன்றாக இருந்ததால் நான் அவரை கைது செய்தேன். அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் பஞ்சமூர்த்தி, அருள் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். என்னை அழைத்துச்

சென்றால் பட்டீஸ்வரம் தேனுபுரீஸ்வரர் திருக்கோவிலில் திருடிய ஆஞ்சநேயர் சிலையை எனது வீட்டில் பதுக்கி வைத்திருப்பதை எடுத்து ஆஜர் செய்வதாக ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்தார். அதன்பின்னர் போலீஸ் வாகனத்தில் நானும் என்னுடன் இரண்டு காவலர்கள் மற்றும் எதிரியை அழைத்து கொண்டு இரவு 10.30 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் முடித்த பின்னர் திருத்தணிக்கு கிளம்பினோம். சாட்சி வழக்கு கோப்பை வெகுநேரம் பார்த்ததால் அரசு வழக்கறிஞர் கைப்பற்றுதல் மகஜரை பார்த்து கூறுமாறு கூறினார். 23.12.2022 அன்று 06.00 மணிக்கு எதிரி நீலகண்டனை அழைத்துக் கொண்டு திருத்தணி, தும்பிக்குளம் என்ற ஊரில் உள்ள அவருடைய வீட்டிற்கு சென்றோம். அவரது வீட்டிற்கு பின்புறம் எங்களை அழைத்துச் சென்று அங்கிருந்த ஆஞ்சநேயர் கல்சிலையை எடுத்து எங்களிடம் கொடுத்தார். நான் அழைத்து சென்ற சாட்சிகள் திரு.அருள் மற்றும் பஞ்சமூர்த்தி ஆகியோர்கள் அந்த கோவிலில் வேலை பார்த்தவர்கள் என்பதால் அவர்களிடம் அந்த சிலை அந்த கோவிலுக்குரியதா என்று கேட்டு அந்த சிலையை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். 6.00 – 6.30 மணி வரை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன். கைப்பற்றுதல் தயார் செய்து மேற்கண்ட சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். சாட்சிகளிடம் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் பெற்ற பின்னர் எதிரியையும் வழக்கு சொத்தையும் வண்டியில் ஏற்றிக்கொண்டு வரும்போது எதிரி என்னுடன் ஆஞ்சநேயர் சிலையை திருட வந்த மணிகண்டன் என்பவரை அடையாளம் காட்டுவதாக கூறினார். வேலூர் பைபாஸ் ரவுண்டான அருகே வந்த பொழுது நீலகண்டன் பின்னர் விசாரித்து பெயர் தெரிந்துகொண்ட மணிகண்டன் என்பவரை அடையாளம் காட்ட அவரை காரணம் கூறி அந்த இடத்தில் 23.12.2022 அன்று பகல் 8.45 மணிக்கு கைது செய்து அந்த இடத்திலேயே சாட்சிகள் அருள், பஞ்சமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சிலையை திருடி கட்டப்பையில் எடுத்து வந்து இருவரும் சேர்ந்து நீலகண்டன்வீட்டில் ஒளித்து வைத்தாக கூறினார். நீலகண்டனுக்கு சொந்தமான டாடா இன்டிகா காரில் அந்த சிலையை எடுத்து வந்தாக கூறினார். பிறகு சிலை மற்றும் எதிரிகள் மற்றும் சாட்சிகளுடன் நிலையம் வந்து சேர்ந்தோம். பிறகு எதிரிகளிடம் கைப்பற்றிய களவுச்சொத்தை படிவம் 91 மூலமாக பதிவு செய்தேன். பின் 23.12.2022 அன்று எதிரிகள் இருவரையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். 23.12.2022 அன்று

18.00 மணிக்கு இந்நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். 23.12.2022 அன்று கைப்பற்றப்பட்ட ஆஞ்சநேயர் சிலையை படிவம் 91 மூலமாக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.11** ஆகும். அதன்பிறகு பட்டீஸ்வரம் தேனுபுரீஸ்வரர் கோவிலுக்கு சென்று அங்கிருந்த கணினி இயக்குநரிடம் கண்காணிப்பு கேமராகாட்சி பதிவுகளை குறுந்தகட்டில் பதிவு செய்து பெற்றேன். பின்னர் அந்த குறுந்தகட்டையும் எதிரிகளிடம்பெற்ற அவர்களது புகைப்படத்தையும் ஒப்பீடு செய்வதற்காக சென்னை தடயவியல் துறைக்கு ஆய்வு செய்வதற்காக 31.01.2023 அன்று நீதிமன்றம் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அதன்பின் எதிரிகள் பயன்படுத்தி டாடா இன்டிகா கார் பதிவு எண்.TN–01–AE–1933 பற்றி விசாரணை செய்த போது நீலகண்டனின் குருவான ஜெயமூர்த்தி அந்த காரை எதிரி நீலகண்டன் பரிசாக கொடுத்தாககூறினார். அதை விசாரணை செய்ய ஜெயமூர்த்தி வீட்டிற்கு சென்ற போது அவர் அந்த காரை நீலகண்டனிடம் இருந்து 50ரூபாய்க்கு விலை கொடுத்து வாங்கியதாக கூறினார். அந்த காரை பற்றி மேலும் விசாரித்த போது அந்த கார் 17.03.2020 அன்று ஒரு விபத்து வழக்கில் சிக்கி சேதம் அடைந்ததாக தெரிய வந்தது. அது சம்பந்தமாக ஒரத்தி காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த ஒரத்தி காவல் நிலைய குற்ற எண்.41/2020 ச.பி.279,337 இ.த.ச. வழக்கில் **முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.12** ஆகும். **மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.13** ஆகும். அந்த வழக்கு சம்பந்தமாக **ஆண்டு பட்டிகை வழக்கு எண். 20/2022 நாள் 04.01.2023 அன்று மதுராந்தகம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.14** ஆகும். அந்த காரை பற்றி பவித்திரன் என்பவரிடம் விசாரித்த போது அவர் ஜெயமூர்த்திக்கு ரூ.21,500/– கொடுத்து விட்டு அந்த காரை உடைத்து விட்டுவிட்டதாக தெரிவித்தார். அதன்பிறகு ஒரத்தி காவல் நிலையத்தில் அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்பின் சான்றிட்ட நகலை பெற்று இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். தடயவியல் துறை மூலம் அந்த குறுந்தகடு மற்றும் புகைப்படத்தை ஆய்வு செய்து கொடுத்த அறிக்கையை நீதிமன்றம் மூலமாக பெற்றேன். அந்த ஆய்வில் அந்த குறுந்தகட்டில் நபரின் புகைப்படமும், எதிரியை கைது செய்த போது எடுத்து ஒப்படைத்த புகைப்படமும் ஒரே உருவமாக உள்ளது என அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு 08.12.2023 அன்று ஜெயமூர்த்தியையும், பவித்திரனையும் விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்தேன். தடயவியல் துறைக்கு நீதிமன்றத்தில் கொடுத்த கடிதத்தை பெற்று சென்று ஒப்படைத்த முதல்நிலைக்காவலர் செல்வத்தையும், தடயவியல் துறை கூடுதல் இயக்குநர், தடயவியல் துறை டாக்டர்.சி.புஷ்பராணி ஆகியோர்களை 08.12.2023 அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பட்டீஸ்வரம் தேனுபுரீஸ்வரர் திருக்கோவிலில் கணினி இயக்குநராக இருந்த பத்மநாபன் என்பவரை 08.12.2023 அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவரிடம் இருந்து சாட்சிய சட்டம் பிரிவு 65(பி)ன் கீழான சான்று பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான அருள், பஞ்சமூர்த்தி ஆகியோர்களை 23.12.2022 அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் வழக்கு சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரிகள் மீது 08.12.2023 அன்று ச.பி.457(2), 380(2) உ/இ.34 இ.த.ச., 120(பி) ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இந்த வழக்கை விசாரித்ததில் எதிரி நீலகண்டனும், மணிகண்டனும் ஒரே கருத்தின் அடிப்படையில் குற்றம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டதால் இந்திய தண்டனை சட்ட பிரிவு 34ன் படியும், குற்றம் செய்ய வேண்டும் என்று இருவரும் சேர்ந்து சதித்திட்டம் தீட்டியதால் இந்திய தண்டனை சட்டம் பிரிவு 120(பி)ன் படியும், இரவு நேரத்தில் இருவரும் குற்றம் செய்யும் நோக்கத்தோடு கோவிலுக்குள் நுழைந்து பலகோடி மக்களின் தெய்வ நம்பிக்கைக்குரிய ஆஞ்சநேயர் சிலையை திருடியதற்காக 457(2)ன் படியும், மூடப்பட்ட இடத்தில் சாமி சிலையை திருடியதற்காக 380(2) இதச பிரிவின் கீழும் எதிரிகள் குற்றம் செய்துள்ளதாக இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். நான் கைப்பற்றிய ஆஞ்சநேயர் சிலை என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது தான். அது அ.சா.பொ.1 வரிசையாக ஏற்கனவே குறியீடுசெய்யப்பட்டுள்ளது. அந்த சிலையானது பட்டீஸ்வரம் தேனுபுரீஸ்வரர் கோவிலுக்கு பாத்தியப்பட்டது ஆகும். அந்த கோவில் கும்பகோணத்தில் இருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளது. நான் 06.12.2023 அன்று ஏற்கனவே சட்டப்பிரிவுகள் 457(2), 380(2) ல் இருந்து 380(2), 457(2), 34, 120(பி) இ.த.ச. வாக சட்டப்பிரிவுகளை மாறுதல் செய்து அறிக்கை கொடுத்தேன். அந்த **சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ.15** ஆகும்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**இல்லை**

//True Copy//

Thiru.K.Sivasakthivelkannan, B.A.,M.L.
Additional Chief Judicial Magistrate,
Kumbakonam.